ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1992/30 - 2016 නොවැම්බර් මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.11.10

*1992/30 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

**3 இ பிரிவின் கீழான கட்டளை**

*2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் இறுதியாக திருத்தப்பட்ட, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2016.11.11 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் இதனகத்துப் பின்னர் உள்ளவாறான அட்டவணை மூலம் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பொருட்கள் மீது உற்பத்தி வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவதாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

மேற்குறித்த சட்டத்தின் 3 இ பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2016.05.16 ஆந் திகதிய 1967/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள கட்டளைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 1,
2016, நவெம்பர் 10.

**அட்டவணை**

1. இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களுடன் செய்து கொண்ட பல்வேறு உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் கீழ் இறக்குமதி செய்கின்ற மோட்டார் வாகனங்கள்/பொருட்கள்.

2. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு சனாதிபதி அல்லது பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ பயன்பாட்டுக்காக சுங்க பிணைக்குதத்திலிருந்து விடுவிக்கப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு விபரப் பொருட்களும்.

3. கைத்தொழிற்துறை அமைச்சரினால் சிபாரிசு செய்யப்பட்ட 30% க்கு குறையாத உள்நாட்டில் பொருத்தப்பட்ட அல்லது உள்ளூர் பெறுமதி சேர்ப்புடன் தயாரிக்கப்படுகின்ற இ. மு. கு. இ. 84 மற்றும் 85 என்பனவற்றிற்கு கீழான பொருட்கள்.

4. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 107 (அ) பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள பயணிகள் பிரயாண மூடைகள் (விலக்களிப்புக்கள்) ஒழுங்குவிதிகளின் கீழ் தீர்வையின்றி அப்புறப்படுத்துவதற்கு உரித்துடைய பொருட்கள் யாவும். (235 ஆம் பிரிவின் கீழ்).

5. கப்பல் இருப்புப் பொருட்களாக அல்லது மீள் ஏற்றுமதிக்காக உபயோகிப்பதற்காக பிணைக்குதத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பொருட்கள்.

6. இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டவைகளும் இலங்கையினுள் எந்தவொரு ஏற்றுமதியாளருக்கும் வழங்கப்பட்டவைகளும், அத்தகைய உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்பது பற்றி உற்பத்தி வரிப் பணிப்பாளர் அதிபதி திருப்தியுறும் வண்ணம் போதிய அளவு சான்று வழங்கப்பட்டுள்ளவைகளுக்குமான பொருட்கள் யாவும்.

7. பாராளுமன்ற அலுவல்கள் என்ற விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டு, கிரய காப்புறுதி கேள்வு பெறுமதி (CIF) ஐ. அ. டொ. 62,500 அல்லது யூரோ 55,000 அல்லது யென் 7.0 மில்லியனுக்கு மேற்படாது, 8 ஆவது பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவரினால் இறக்குமதி செய்யப்பட்ட வாகனம் ஒன்று.

8. நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் ஒன்றினைக் கொண்டு, ஏதேனும் வாகன அனுமதிப்பத்திரத் திட்டத்தின் கீழ், கிரய காப்புறுதி கேள்வு பெறுமதி (CIF) ஐ. அ. டொ. 62,500 அல்லது யூரோ 55,000 அல்லது யென் 7.0 மில்லியனுக்கு மேற்படாது, கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் வாகனம் ஒன்றினை இறக்குமதி செய்யாத அல்லது கொள்வனவு செய்யாத மாகாண சபை ஆளுநர் ஒருவரினால், இறக்குமதி செய்யப்பட்ட வாகனம் ஒன்று.

12- 87

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.